# ★ ஸ்ரீமாவின் வீட்டில் இரகசியப் பொலிஸார் திடீர் சோதனை!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 22 இதழ் 277
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-11-1994

(கொழும்பு)

இரகசியப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு திருமதி ஸ்ரீமா திஸாநாயக்காவின் வீட்டை சோதனையிட்டனர் என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

பிரதமரும் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவை இழிவுபடுத்தும் பிரசுரங்கள் ஸ்ரீமா திஸாநாயக்காவின் வீட்டில் உள்ளதா என்பதை சோதித்துப்பார்க்கும் விதமாகவே இரகசிய பொலிஸார் அவரது வீட்டை

(4-ம் பக்கம் பார்க்க)

## காமினி கொலை விசாரணை முடிவு உடன் கிடைக்கும்

(கொழும்பு)

காமினி திஸாநாயக்காவின் கொலை குறித்து பூரண விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணை முடிவுகள் விரைவில் அரசுக்குக் கிடைக்கும்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ராய்டர் செய்திஸ்தாபனத்துக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் விசாரணை முடிவுகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் அது அரசுக்கு பெரும் சங்கடமான ஒரு நிலையை ஏற்படுத்துமென்றும் பொதுமக்

[2ம் பக்கம் பார்க்க]

# ★ நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கென தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்!

## நாடு முழுவதும் முப்படையினர் உஷார் நிலையில்!!

[கொழும்பு]

நாளை 9ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. தேர்தலின்போதும் தேர்தலின்பிறகும் நாட்டில் வன்முறைகள் இடம்பெறுமல் தடுப்பதற்கு முப்படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். சுமார் 40 ஆயிரம் பொலிஸார் தேர்தல் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவார்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவுக்கே வெற்றி வாய்ப்பு

(கொழும்பு)

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஜனாதிபதி தேர்தலில் மிகச் சுலபமாக வெல்லக்கூடியவாய்ப்புள்ளது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி' 34, 98, 380 வாக்குகள் பெற்றது. பொதுசன

(4-ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா வென்றதுமே அரசு-புலிகள்பேச்சு ஆரம்பம்

(கொழும்பு)

அரசு எதிர்பார்ப்பதுபோல் நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க வெற்றி பெற்றதுமே விடுதலைப் புலிகளுடன் தாமதமின்றிச் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகும் என அரச தரப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் மாதம் 24ம் திகதி கொழும்பு கிரேண்ட்பாஸ் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசநாயக்கா கொல்லப்பட்டதையடுத்து, அரசு-புலிகள் சமாதானப் பேச்சு காலவரையின்றி ஒத்திப்போடப்பட்டது

நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதில் அரசு தீவிரமாக

(4-ம் பக்கம் பார்க்க)

## ரஷ்யாவிலிருந்து கனரக யுத்த தளபாடங்கள் கொள்வனவு!

(கொழும்பு)

இலங்கை அரசு ரஷ்யாவிடமிருந்து மூன்று மிகப் பெரிய போக்கு வரத்து விமானங்களையும் எட்டு போக்குவரத்து ஹெலிகொப்டர்களையும் 200 க்கும் மேற்பட்ட கனரக டாங்கிகள் மற்றும் இரு பாரிய கப்பல்களையும்

(2-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## காமினி கொலை பின்னணியில் வெளிநாட்டு உளவு அமைப்பு!

— 'ஹிரு' சிங்களப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

காமினி திசநாயக்காவின் கொலைக்குப் பின்னணியில் வெளிநாட்டு உளவு அமைப் பொன்று செயல்பட்டதாக 'ஹிரு' சிங்களப்பத்திரிகை தெரிவித்துள்ளது

'ஹிரு' இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்; காமினி கொலையில் வெளிநாட்டு தொடர்புபற்றி விசாரணைகள் ஆரம்பமாகி உள்ளது, இந்தக்கொலையில் வெளிநாட்டு உளவுச்சேவை சம்பந்தப்பட்டதென்ற கருத்

(4ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமா அரசுமீது குற்றச்சாட்டு

[கொழும்பு]

கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு குறித்தும், தமது கணவரின் கொலை குறித்தும் சம்பந்தமான விசாரணைகளை அரசு வேண்டுமென்றே தாமதப்படுத்தி வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் திருமதி ஸ்ரீமா திஸாநாயக்கா நேற்று அரசு மீது குற்றஞ்சுமத்தினர். (இ)

## ஜனாதிபதி தேர்தலில் வென்றாலும் இந்தியப் படையை இங்கு அழைக்கமாட்டேன்!

— ஸ்ரீமா கூறுகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் நான் வெற்றிபெற்றால் இலங்கைக்கு மீண்டும் இந்தியப் படைகளை அழைக்கமாட்டேன். எனினும் இந்தியாவுடன் நல்லுறவை மேலும் வளர்ப்பேன் என ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளர் திருமதி ஸ்ரீமா திஸநாயக்கா 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தேர்தலின் பின் புதிய அரசியல் கட்சி உதயம்?

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் பின்பு புதிய அரசியல் கட்சி ஒன்று உதயமாகும் வாய்ப்பு உள்ளதாக 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஒரு சிலரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து வேறுசிலரும்இணைந்து இந்தப்புதிய கட்சியை ஆரம்பிக்கப்போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இளம் தலைவர் ஒருவரின்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

11–11–94
வியாழ மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றது. ரூபா 10/- (எல்லா ராசிகளின் பலன்கள்) பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (நூலாசிரியர்-சத்யா) கூட்டுடை.
(சி-1302)


## இன்று

(அரியாலை)
யாழ். வண்ணை சிவன் ஆலயத்தில் கடந்த 4ந் திகதிவெள்ளிக்கிழமை முதல் ஸ்கந்த ஷட்டி உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இன்று 8ந் திகதி செவ்வாய்க்கிழமை சூரசங்காரம் உற்சவம் இடம்பெறும்.
-59

## வாழைச்சேனையில் பொலிசார் குவிப்பு

[மட்டுநகர்]
மட்டு - வாழைச்சேனையில் கூடுதல் பொலிசார் குவிக்கப்பட்டு அங்கு அவர்களது சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வாழைச்சேனை நகரின் பிரதான சந்திகளில் கூடுதலான பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் சிலவீதிகள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளன.

சில பகுதிகளில் சுற்றிவளைப்புகளும், தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
-ரி

## கோரிக்கை

[கொழும்பு[
திருமதி ஹேமா பிரேமதாஸாவை தேசியப்பட்டியலில் சேர்க்குமாறும் அவரது மகன் சஜித் பிரேமதாசாவை ஐக்கியதேசியக்கட்சி நிறைவேற்றுக் குழுவுக்கு நியமிக்குமாறும் ஜனாதிபதி வேட்பாளர் திருமதி ஸ்ரீமா திஸாநாயக்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவை கேட்டுள்ளார்.

ஹேமாவும் அவரது மகனும் திருமதி ஸ்ரீமா திஸாநாயக்காவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.
(ரி)

### காமினி கொலை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மத்தியில் அரசுக்கு அது ஒரு அபகீர்த்தி நிலையை ஏற்படுத்துமென்றும் பெயர் குறிப்பிடவிரும்பாத அரசின் மற்றொரு சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
(இ)

### ரஷ்யாவிலிருந்து
(1-ம் பக்கத்தொடர்ச்சி)
இவ்வாரம் கொள்வனவு செய்யவுள்ளதாக பெயர் குறிப்பிடவிரும்பாத பாதுகாப்பு அமைச்சரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தகொள்வனவு குறித்து பாதுகாப்பு அமைச்சரக அதிகாரிகள் உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மூன்று எம். ஐ. 17 ரக ஹெலிகொப்டர்கள் அடுத்த இரு வாரத்தில் இலங்கைக்கு வரவுள்ளன. இவை மேற்கூறப்பட்ட ஆயுதக் கொள்வனவில் அடங்கவில்லை எனவும், தெரிவிக்கப்படுகிறதுமேற்கூறப்பட்ட ஆயுதக் கொள்வனவிற்காக அரசு 530 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடற்படையினருக்கென சீனவிலிருந்து யுத்தக் கப்பல்கள் உட்பட பல்வேறுவகை யுத்த தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.
(சி - இ)

# 'மரம், செடிகளை வெட்டி வீதிகளில் போடாதீர்கள்'

(கொழும்புத்துறை)
மாரிகாலம் ஆரம்பித்ததும் நகர்ப்புற மக்களில் சிலர் தமது வீட்டு வளவில் உள்ள மரம் செடிகளை வெட்டி வீதிகளிலும் பொது இடங்களிலும் போடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் வீதி பாவனையாளருக்கு சிரமத்தையும் தேவையற்ற விபத்துக்களையும் ஏற்படுத்துகின்றது. நகரத்தில் எமது சுத்திகரிப்பு பணிகளும் பாதிககப்படுகின்றது.

இவ்வாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: எரிபொருள் பற்றுக்குறை, வாகனப் பற்றுக்குறை இருந்தும் மாநகரசபை நகர்ப்புற சுத்திகரிப்புச் சேவையை இயன்றளவு செய்து வருகின்றது. கொலரா பரவும் காலத்தில் நீர் விநியோகம் அத்தியாவசிய சுத்திகரிப்புப் பணிகளுக்கு வாகனத் தேவை மிகவும் முக்கியமாகின்றது.

ஆகையால் வீட்டு வளவுகளில் வெட்டப்படும் மரக்கிளை, முள்செடிகள் ஆகிய வற்றை வீதியோரத்தில் பொது இடங்களில் போட வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

இதனையும் கவனமெடுக்காமல் வீதிகளையும் பொது இடங்களையும் அசுத்தம் செய்பவர்கள்மீது யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினரால் நடவடிக்கை எடுககப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
(154)


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-

1995 ம் ஆண்டு.யாழ் பெரும்பாகத்தில் (கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த) உள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்தஉணவு வழங்குவதற்கான கேள்விகள், 1994-ம் ஆண்டு நவம்பர் 23 ம் திகதி முற்பகல் 10 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்படிவம் வழங்குவதற்கான இறுதித் திகதி 22-11-94 நண்பகல் 12-00 மணியாகும். முழு விபரமும் எமது பணிமனையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பிற்குறிப்பு: மூலப்பிரதியிலான, ஜி—170 படிவத்திலுள்ள பெறுமதியுறுதிச் சான்றிதழ் மட்டுமே, பெறுமதியுறுதிச் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

நா. விவேகானந்தன்
தாய் சேய் நல வைத்திய அதிகாரி,
மாகாண பிரதிப் பணிப்பாளருக்காக

மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை/
சுகாதார சேவைகள்,
33, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
28-10-1994.
[எ 4485]



## விவசாயிகளே,

# தங்க விருது
## உங்களுக்குத்தான்

வேளாண் மன்னர் தெரிவுப் போட்டி

நீங்கள் நெற்பயிரிடும் விவசாயிகளாக இருந்தால் இந்தப் போட்டியில் பங்கு பற்றலாம்.

இந்தப் போட்டியானது வடதமிழீழம் முழுவதும் உள்ள சகல மாவட்டங்களிலும் மழையை நம்பிய நெற்செய்கையிலும், நீர்ப்பாச்சுகை நெற்செய்கையிலும் தனித்தனியே நடாத்தப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு...........

★ உற்பத்திக் குழுக்கள்
★ கமநலசேவை நிலையங்கள்
★ விவசாயத் திணைக்களம்
★ பசுமை வேளாண்சேவை நிலையம்
★ மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகங்களில் தொடர்பு கொள்ளவும்

விண்ணப்ப முடிவு திகதி: 30–11-1994

விவசாயப்பகுதி
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழம்.

(எ 4487)


பல மாவட்டங்களுக்கு
# சர்வதேச ,அவதானிகள் நேரில் செல்வர்

(கொழும்பு)
ஜனாதிபதி தேர்தலை கண்காணிக்க வந்துள்ள சர்வதேச அவதானிகள் குழு இன்றும் நாளையும் பல்வேறுமாவட்டங்களுக்கும் சென்றுநிலைமைகளை நேரில்அவதானிக்கவுள்ளனர்.

சர்வதேச அவதானிகளை சந்தித்து தமது கருத்துக்களை முறைப்பாடுகளை தெரிவிக்க விரும்பும்பொது அமைப்புகள் இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும்.

வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால் வேட்பாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் வாக்குச்சாவடியிலுள்ள சிரேஷ்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கலாம்.

சர்வதேச அவதானிகள் குழுவில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளையும் சர்வதேச நியாயவாதிகள் குழுவையும் சேர்ந்த பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். -சி

# வடபகுதி மீனவர் விரைவில் நன்மைபெறுவர்

(கொழும்பு)
கடந்த பல வருடங்களாக வடபகுதி கடல்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்இவர்கள்விரைவில் நன்மைபெறுவார்கள்,

இவ்வாறு கடற்தொழில் அமைச்சர் திரு. இந்திக குணவர்த்தன சிலாபத்தில் நடைபெற்றவைபவம்ஒன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறுகையில் கடநத பத்து வருடங்களாக நடைபெற்றுவரும், அர்த்தமற்ற இந்த யுத்தத்தினால் மீன்பிடித் தொழில் பாதிப்படைந்துள்ளது. குறிப்பாக வடபகுதி மீனவர் பெரிதும் பர்திக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தயுத்தத்துக்கு முடிவுகட்ட அரசு பலவழிகளாலும் முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது இத்தருணத்தில் பல தீயசக்திகள் இந்த நாட்டில் இனப்பிரச்னையை உருவாக்க திரைமறைவில் செயல்பட்டு வருகின்றன. இதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது என்றும் கூறினார் வி-சி

# கொடுப்பனவு தாமதம் ஓய்வூதியர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் ஓய்வூதியம் பெறும்அநேகர் தமது கொடுப்பனவுகளில் ஏற்படுமதடங்கல்கள், தாமதங்கள் காரணமாக தமது கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் வழங்கப்படாமையாலும் அதிகரித்த வாழ்க்கைச் செலவை சமாளிக்கமுடியாமையாலும் பாதிப்படைந்துள்ளார்கள் என்று வடமாநில ஓய்வூதியர்சங்கங்களின் சம்மேளன செயலாளர் திரு. பி, எஸ். திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

புதிதாக இளைப்பாறிய அரச ஊழியர்கள், விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய மாற்றங்கள் மட்டுமல்ல அரசினால் பல மாதங்களுக்கு முன்னரே மறறும் மாவட்ட ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட முரண்பாட்டு அதிகரிப்புகள், நிலுவைகள், யாழ் மாவட்ட சிவில் ஓய்வூதியர்களுக்கு இதுவரை வழங்கப்படாதமை குறித்து யாழ் அரச அதிபருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும் இதுபற்றி சம்மேளனத்தின் அவசர கூட்டம் ஒன்று எதிர்வரும் 12-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# "யாழ்ப்பாண மக்களுக்கு கல்வி முதன்மையானது"
— பேராசிரியர் ஆறுமுகம்

(யாழ்ப்பாணம்)
''யாழ். இந்துக் கல்லூரி கல்வியில் மட்டுமல்லாது தலைமைத்துவப் பயிர் வளர்ப்பிலும் ஒரு நாற்று மேடையாகச் செயல்பட்டு வருகிறது.''

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர் அ. பஞ்சலிங்க தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் ஆறுமுகம் தொடர்ந்து உரையாற்றுகையில் யாழ்ப்பாண மக்களுக்கு கல்வி முதன்மையானது. கல்வி மற்றும் கைத்தொழில் என்பது எமது மக்களின் பண்பாடு மரபுபோன்றவைகளுடன் இணைந்து நிற்கிறது.

எமது மாணவர்கள் கல்வியோடு தொழிற்துறைகளிலும் வளர்ச்சி பெற வேண்டும். காலத்துக்குக் காலம் மாற்றம் பெறும் அரசு தங்கள் அரசியல் நோக்கத்துக்காக பாடத்திட்டங்களை மாற்றுவதுண்டு. ஆனால் இது நிலைத்து நிற்பது கிடையாது என்றும் அவர் தமதுரையில் தெரிவித்தார்.

பரிசுபெற்ற மாணவர்களுக்கு திருமதி செல்வராணி ஆறுமுகம் பரிசில்களை வழங்கினார்.
(162-ரி)

## ஸ்கந்த ஷஷ்டி

(கொழும்புத்துறை)
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் ஸ்கந்த ஷஷ்டி திருநாட்களில் தினமும் பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 3-00 மணிவரை சமயச்சொற்பொழிவுகள் பல்வேறு தலைப்புகளில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் பங்குபற்றி சொற்பொழிவாற்றிவருகிறார். 154

0 0 0

(கொழும்புத்துறை)
நெல்லியடி தடங்கன் புளியடி ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய ஸ்கந்த ஷஷ்டி பெருவிழா கடந்த வெள்ளி ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

''கந்தன் கருணை'' என்ற தலைப்பில் தினசரி மாலை 7-00 மணிக்கு ஆசிரியர் ஆ, சிவநாதன் சமயச் சொற்பொழிவாற்றுகிறார்.

சூரசங்காரம் இன்று 8ம் திகதி செவ்வாய்க்கிழமையும், நாளை மாலை திருக்கல்யாணமும் நடைபெறும். 154

மணிவாக்கு

உரிமை பறிபோகாமல் காத்துக் கொள்ள உதவும் ஒரு கருவி தான் போர்.

- தொல்காப்பியர்

நாளை ஜனாதிபதித் தேர்தல்

# வாக்களிப்பு நிலையங்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் நோக்கில் சகல வாக்களிப்பு நிலையங்களுக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதற்காக நாடு முழுவதிலும் 60,000 பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களிலும் பொலிஸார் விஷேட கடமையில் ஈடுபடுவர்,

வாக்குச் சாவடிக்குள் அல்லது வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு செல்ல தேர்தல் உத்தியோகத்தர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்டவர்களும் மட்டுமே அனுமதியளிக்கப்படும், இச்சட்டத்தை கண்டிப்பாக அமுல் செய்யுமாறு பொலிஸார் கேட்கப்பட்டுள்ளனர்,

பொலிஸாருக்கு உதவியாக முப்படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். கொழும்பில்தேர்தலையொட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (சி)

## நோயாளர் அதிகரிப்பு

(அரியாலை)

யாழ். போதனு வைத்திய சாலைக்கு பல்வேறுபட்டநோய்கள் காரணமாக பெருந்தொகையான நோயாளர்கள் வந்து செல்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் வெளி நோயாளர் பிரிவில் 800க்கு மேற்பட்ட நோயாளர்கள் வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. -59

## நமது நோக்கு

### பழத் தோட்டம்!

''செரிப்பழத் தோட்டம்'' - இது ஒரு ஆங்கில நாடகம்; ருஷ்ய எழுத்தாளர் அன்ரன் செக்கோவ் எழுதியது. புரட்சிக்குமுன் ருஷ்ய உயர் குழாத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்குப் பாரிய பழத்தோட்டம் இருந்தது.

ஆனல் - ஆடம்பர வாழ்க்கையாலும் போலிக் கௌரவத்தாலும், செலவுகள் அதிகரித்து, தோட்டத்தையே இழக்க நேர்ந்தது. இது நாடகத்தின் கருப்பொருள்.

இன்று - அக்கா சந்திரிகாவிற்கு எதிராக அநுரா, காமினி குடும்பத்திற்குச் சார்பாகப் பிரசாரம் செய்கிறுர் அல்லவா?

ஆனல் - இதே அநுரா 9-10-87ல் பேசியதாக 'ஹன்சாட்'டில் உள்ள செய்தி என்ன?

''1956ல் கண்டியில் சில்வர்டேல் தேநீர்ச்சாலை நடத்திக் கொண்டிருந்த அன்ரு திசநாயக்காவை (காமினியின் தந்தை) எனது தகப்பனுர் அழைத்து நுவரெலியாவிற் போட்டியிட வைத்தார். உவரிடம் போதிய பணம் இல்லாத காரணத்தால், எமது வீட்டிலேயே தங்கியிருந்து தமது தேர்தற் பிரசாரத்தை மேற்கொண்டார். நாடாளுமன்றம் சென்ற பின் பணம் திரட்டும் குறிக்கோள் இருக்க வில்லை. அவுஸ்திரேலியாவில் அப்பிள் தோட்டம் வாங்கவில்லை!''

ஆனல் - காமினியார் மறைவதற்கு முன் 25-9-94ல் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைப் பேட்டியிற்கூறியது என்ன?

''கொத்மலைப் பிரதேசத்தின் பெரும்பகுதி எமது தாத்தாவிற்கு இருந்தது. மூன்னூறு வருடங்களுக்கு மேலாக நாம் பணக்காரர். ஒன்றல்ல, பல தலைமுறைகளுக்குப் போதுமான பணம் எம்மிடம் இருக்கிறது!''

அரசியலில் - யார் கூறுவதை நம்புவது?

பழத் தோட்டங்கள் யாரிடமும் இருக்கலாம்; போகலாம்.

ஆனல் - பொது வாழ்வில் இருப்போர்கள் தமது கரங்கள் சுத்தமானவை என்பதை நிரூபிக்க வேண்டும்.

மகாவலித் திட்டம் போன்றவை மீளாய்வு செய்யப்படும் போது பல உண்மைகள் வெளிவரலாம்!

செக்கோவின் நாடகம் தரும் பாடம் என்ன? ''வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது!'' என வள்ளுவர் தந்த கருத்து.

இன்று - அரசியலுக்கும் பொருந்துவதாக இருக்கிறதல்லவா?

சந்ததிக்கான சேவை கற்பகச்சோலை

# தேர்தல் வன்முறை தொடர்பாக 500க்கும் மேற்பட்டோர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வன்முறை, தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய 500க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் சுமார் 800 வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. இதில் பெருமளவு புகார்கள் ஐ. தே. க ஆதரவாளர்களுக்கு எதிராகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசார கூட்டங்கள் உட்பட பல்வேறு பகுதிகளிலும் வன்முறைகளிலும் அடிதடி மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகவும் பல கட்சிகளையும் சேர்ந்த 500க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பலர் பொலிஸாரிடம் அகப்படாமல் தலைமறைவாகியுள்ளதாகவும் இவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சி

## புலதும் பத்தும்

### தொலைத் தொடர்பு:

புருக்கள் மூலம் செய்திகள் பரிமாறிய காலம் போய், தந்திக்கம்பிகள், வானெலி அலைகள் காலமும் மாறி வருகிறது. செய்மதிகள்மூலம் தொலைத்தொடர்புச் சாதனங்கள் வந்துவிட்டன அல்லவா?

தற்போது - 280 செய்மதிகள் விண்ணிலே வலம் வந்து கொண்டிருக்கின்றன. 2001ஆம் ஆண்டளவில் இதன்தொகை 840ஆக அதிகரிக்க G E O- Partners Research என்ற நிறுவனம் திட்டமிட்டு வருகிறது.

உலகம் முழுவதிலும் ... 435 மைல் உயரத்தில் . . 28 வித்தியாசமான பாதைகளில் அவை சென்றுகொண்டிருக்கும். ஆறு வருடத்திற்கொருமுறை அவை மாற்றப்பட வேண்டும். இது பாரிய செலவினவேலை; ஆனுற் சில நாடுகளின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லையாம்!

—மயூரன்.

# சமாதான தீர்வுக்கு சிங்களவர் ஆதரவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுவதையே சமூகத்தின் பெரும்பாலானேர் ஆதரிப்பதாக, மிடாக்கி இன்ரநாஷனல் லிமிட்டெட்டின் உள்ளூர்ப் பிரதிநிதியான இன்ரநாஷனல் றிச்சர்ட் பிறைவேற் லிமிட்டெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையுடன் இணைந்து நடாத்திய கருத்துக் கணிப்பின் மூலம் மேற்கண்ட முடிவு வெளியாகியிருப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. அது பற்றி மேலும் தெரிவிக்கையில்;

65.9 வீதமானேர் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதையே விரும்புகின்றனர். 21 வீதமானேர் இராணுவத் தீர்வையே விரும்புகின்றனர். பேட்டி காணப்பட்டவர்களில் 85 வீதமானேர் சிங்களவர்கள். 4 வீதமானேர் தமிழர்கள். 5 வீதமானேர் முஸ்லிம்கள்.

பல்வேறு தரப்பினரும் இப்பேட்டிக்காக அழைக்கப்பட்டனர். 1.6 வீதமானேர் சமூகத்தின் உயர் மட்டத்தினர். 40 வீதமானேர் மத்திய வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ளது. (க-சி)

## நூல்கள் அன்பளிப்பு

(அச்சுவேலி)

சுவாமி விவேகானந்தரின் 'ஞானதீபம்' நூல்த்தொகுதி புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி நூலகத்திற்கு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவா ஆச்சிரமத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. ஆச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா நூல்களை கல்லூரி அதிபரிடம் வழங்கினர்.

## இராசி பலன்

08 - 11 - 1994

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி-22)

பஞ்சமி காலை 9-00 வரை பூராடம் மாலை 5-57 வரை மரணயோகம் ஃராகுகாலம் மாலை 3-05 முதல் 4-34 வரை சுபநேரம் பகல் 10-35 முதல் 12-05 வரை

மேடம்: காரியதாமதம், பணவிரயம், வாக்கு வாதம்.

இடபம்: மனவேற்றுமை, அமைதிக்குறைவு, தொழில் பகை.

மிதுனம்: பெரியார் நல்லாசி, தெய்வ வழிபாடு, கடித அனுகூலம்.

கடகம்: கடமை தவறுதல், பொருள் சேர்க்கை, பயணம்.

சிங்கம்: தொழில் பகை. தொல்லைகள், மனைவி துயர்,

கன்னி: புத்திரர் பெருமை, சகோதர வெறுப்பு அலைச்சல்.

துலாம்: பழைய பாக்கி வசூல், பதவிமாற்றம், பெண் உதவி.

விருச்சிகம், முயற்சித்தடை உடல் அசதி, கண்டனம்.

தனுசு: குடும்ப உற்சாகம், தொழில் லாபம்: வாக்கு வன்மை.

மகரம்: பயனற்ற பிரயாசம், பணமுடை, வீண்கோபம்

கும்பம்: நற்செய்தி, மனமகிழ்ச்சி, தற்புகழ்ச்சி.

மீனம்: பந்துக்கள் நேசம், கருத்தொற்றுமை, புகழ்.

— ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994—11—08

செவ்வாய் இரவு

08-01 - மேஜர் பசீலன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - மலரண்ணை எழுதிய 'முல்லையின் மைந்தன்''

08-20 - நலந்தானு - நிகழ்ச்சியில் பிறக்கும் குழந்தைகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளைத் தவிர்ப்பதற்குவைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோ வழங்குவார்.

08-30 - செய்திகள்

08-40 - கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய'தேவைகள்'

08-50 - களமும் கானமும் எஸ். லாவண்யா எழுதிய ''வீரத்தின் விளை நிலங்கள்''

09-00 - இரவு நிகழ்ச்சியில் யாவும் நிறைவு பெறும்.

1994-11—09

புதன் காலை

07-02 - மாவீரவணக்கம்

07-15 - நீங்கள் கேட்டவை

07-30 - செய்திகள்

07-35 , பத்திரிகைச் செய்திகள்

07-40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சிகள் தொடர்ச்சி

08-00 - காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

★ இன்று சூரன் போர்

# சூரபத்மனை வதம் செய்த முருகப் பெருமான்

இந்திரன் முதலிய தேவர்கள் எல்லோரும் திருக்கைலாய மலைக்குச் சென்று தங்களுக்கு அசுரர்கள் தீமை செய்து வருகிறுர்கள் ஒன்று முறையிட்டு அழுதார்கள். தேவர்கள் மேல் இரங்கிய இறைவன் நீங்கள் எவரும் கவலைப்படவேண்டாம். முருகன் திருஅவதாரஞ்செய்து சூரனுகியரை அழிப்பான் என்று அருளினர்.

சிவன் நெற்றிக்கண்ணினின்றும் ஆறு சுடர்ப்பொறி உண்டாக்கினர். அந்த ஆறு சுடர்களை ஏந்திச்செல்லுமாறு வாயுவையும் அக்கினியையும் அழைத்தார். முதலில் வாயு அவற்றை எடுத்துத் தாங்க முடியாமல் அக்கினியிடம் கொடுத்தார். அக்கினியும் அவற்றை தாங்கமுடியாமல் கங்கையில் விடுத்தார் கங்கை அவற்றைத் தாங்கிச் சென்று சரவணப்பொய்கையில் ச,ர,வ,ண,ப,வா என விடுத்தாள். இந்த ஆறுபொறிகளும் ஒன்று சேர ஆறுதிருமுகங்களும்பன்னிரண்டுதோள்களும் கொண்ட முருகப்பெருமானுக திருவதாரமாயினர். கார்த்திகை நட்சத்திரமாயுள்ள ஆறு பெண்களும் முருகப்பெருமானுக்கு பாலூட்டிவளர்த்துவந்தார்கள். ஒருநாள் உமாதேவியார் அவ்விடம்சென்று ஆறுபிள்ளைகளையும் அணைத்தபொழுது அவர்கள் ஒருவராயினர். சிவன் பிள்ளைக்கு 'கந்தன்' எனப் பெயரிட்டார்.

இந்நிலையில் தேவர்களை சூரபதுமன் தனது சகோதரனுகிய தாருகன், சிங்கமுகன் ஆகியோரின் துணையுடன் கொடுமைப்படுத்தி அவர்களை சிறைப்படுத்தி, பல அட்டூழியங்களை இழைத்துவந்தான். இவர்களின் கொடுமைகளால் தேவர்கள் கஷ்டப்படுவதை அறிந்த கந்தன் அவர்களைக் காக்க மனதில் எண்ணியவாறு தென் திசையாக எழுந்தருளித் திருச்செந்தூரில் தங்கியிருந்தார். தமது வீரரில் சிறந்தவரான வீரவாகுதேவர் என்பவரை அழைத்து சூரனிடம் தூதுசெல்லுமாறும் அனுப்பினுர். அவரும் சென்று சூரன் வாழவேண்டும் என்று விரும்பினுல் சிறைப்பட்ட தேவர்களை விடுதலைசெய்ய வேண்டும் அன்றேல் போருக்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும் என்றுர். சூரனும் போருக்கு ஆயத்தமானுன்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மிடையில் பெரும்போர் மூண்டது. முருகன் தேவர் சேனைகளுக்கு தலைமைவகித்தார். சூரன் தன் தோல்வியை கண்டும் மனந்தாங்காது மாய வடிவங்களை எடுத்தும் மிருகங்களாகவும், மாமரங்களாகவும் போர் செய்தான். கந்தனிடம் இவையெல்லாம்பலிக்கவில்லை. இறுதியில் கந்தனுடன்போருக்கு அஞ்சி மாமரமாக உருவெடுத்தான். கந்தன் உடனே மரத்தை இரண்டாகவெட்டினுர். அந்த மரத்தில் இருந்து மயிலும் சேவலும் உருவாயின. கந்தன் மயிலைவாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் அடக்கி ஆட்கொண்டார்.

நவாலியூர்
சி. இராஜேஸ்வரன்

## முட்டை விலை வீழ்ச்சி

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் பெருமளவு முட்டைகள் சந்தைக்கு வந்துள்ளதால் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. 7.00 ரூபாவாக விற்றமுட்டை ஒன்று 5 ரூபா 50 சதமாக தற்பொழுது விற்கப்படுகிறது.

-59

# பொலிஸார் வெளியேற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடிப் பாலப் பகுதியில் இருஇடங்களில் நிலைகொண்டிருந்த பொலிசார் அவ்விடங்களில் இருந்து வெளியேறியுள்ளதாக தெரியவருகிறது,

மீன்பிடிக்கூட்டுத்தாபனத்தின் மீன்பதப்படுத்தும் நிலையத்திலும் ஐஸ் தொழிற்சாலை கட்டிடத்தினுள்ளும் நிலைகொண்டிருந்த பொலிசாரே வெளியேறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. க-இ

## 1,112 முறைப்பாடுகள் இதுவரை பதிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்த நாள் முதல் தேர்தல் சம்பந்தமாக இதுவரை 1,112 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பொதுசன ஐக்கிய முன்னணி 520 முறைப்பாடுகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 537 முறைப்பாடுகளையும் செய்துள்ளன. (இ)

## மாத்தறை மாவட்ட முன்னாள் எம். பி. கைது

(கொழும்பு)

மாத்தறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மதுரபால எதிரிவீர வெலிகமவில் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஆயுதம் சகிதம் சட்டவிரோதமாக நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டமைக்காகவும், கொலை அச்சுறுத்தலை விடுத்ததற்காகவும் இவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை நீதவான் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட மதுரபால எதிரிவீராவை 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 25ஆயிரம் ரூபா சொந்தப் பிணையிலும் செல்ல நீதவான் அனுமதித்தார்.

இவ்வழக்கு விசாரணை அடுத்த மாதம் 12ம் திகதி ஆரம்பமாகும் எனவும் நீதவான் தெரிவித்தார். (க-இ)

## கேகாலை மாவட்டத்தில் பலியானோர் தொகை நால்வர்

(கொழும்பு[

கடந்த சனிக்கிழமை கேகாலை மாவட்டத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் இடம் பெற்ற கோஷ்டி மோதலில் நால்வர் பலியாகினர்,

பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் இருவரும், ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர் ஒருவரும், பொலிஸ் உத்தியோஸ்தர் ஒருவரும் பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## அதிபர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ இடைநிலைப் பொதுத்தேர்வின் செய்முறைக்கான அறிவுறுத்தல் பொருட்பட்டியல், வினாத்தாள்கள் ஆகியவற்றை இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 1 மணிக்கு தத்தமது கல்விக் கோட்டத்தில் அதிபர்கள் பெற்று விஞ்ஞான ஆசிரியர்களின் உதவியுடன் தேர்வினைத் திட்டமிட்டவாறு நடாத்தி ஒத்துழைக்குமாறு தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

## ★ கொழும்பிலுள்ள அமெ. தூதரகத்தின் முன் மீனவர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சிலாபம் பன்னலையில் ''வொய்ஸ் ஒப் அமெரிக்கா'' வானொலி நிலையம் நிறுவப்படுவதை எதிர்த்து, நேற்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக காரியாலயத்தின் முன்னால் பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பன்னலையில் வொய்ஸ் ஒப் அமெரிக்க வானொலி நிலையம் நிறுவப்பட இருக்கும் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மீனவர்களே இந்த ஆர்ப்பாட்டத்தை நடாத்தினார்கள்.

மேற்படி வானொலி நிலையம் நிறுவப்படுவதினால் தாம் பெரிதும் பாதிப்படைவதுடன் தமது இருப்பிடங்களையும் தொழிலையும் துறக்கவேண்டியுள்ளதாகஇவர்கள்ஆர்ப்பாட்டம்செய்ததுடன் இச்செயலைக் கண்டித்து அமெரிக்க உயர் ஸ்தானிகரிடம் மகஜர் ஒன்றையும் சமர்பித்தனர். வி-இ

# பிரதமரை இழிவுபடுத்தும் சுவரொட்டிகளை ஒட்டியோர் கைது

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்காகுமாரதுங்கவை இழிவுபடுத்தும்முகமாகச் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த பலர், பல இடங்களில் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிசார் நேற்றுத் தெரிவித்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகளுடன், பிரதமரை இழிவுபடுத்தும் சுவரொட்டிகளையும், பிரசுரங்களையும் ஐக்கிய தேசியக் கட்சியினர் நாடு பூராவும் விநியோகித்துள்ளதாகவும், இவ்வாறான சுவரொட்டிகளும், பிரசுரங்களும் ஆயிரக்கணக்கில் மஹரகமை, குளியாப்பிட்டிப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டதுடன், 16க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் குளியாப்பிட்டி ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரர் ஒருவர் என்றும் பொலிசார் மேலும்தெரிவித்தனர். (வி-இ)

## க. பொ. த. [சா/த] பரீட்சார்த்திகளுக்கு உடன் அடையாள அட்டை

[கொழும்பு]

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதர [சாதாரண] தர பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு உடன் அடையாள அட்டைகளை வழங்கும் விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடையாள அட்டைகளை துரிதகதியில் வழங்கு முகமாக விசேட அதிகாரிகளை கொண்ட குழுஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென ஆட்பதிவுத் திணைக்களத்தில் விசேட கரும பீடம் ஒன்று செயற்பட்டுவருகிறது.

இப்பீடம் வார இறுதிநாட்களிலும் செயற்பட்டு வரும் என திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியான கமலா உயன்வத்த தெரிவித்துள்ளார். [க-இ]

## ஜனாதிபதி தேர்தலின்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

கீழ் புதிய கட்சிபற்றி கலந்துரையாடப்பட்ட கூட்டத்தில் பல ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்,

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரபல அரசியல் வாதியின் மகன் ஒருவர் இந்தக் கட்சியை ஆரம்பிப்பதில் அக்கறையுடன் செயல்பட்டுவருகிறார்.

இதேவேளையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (பிரேமச்சந்திர பிரிவு)தேர்தலின் பின் கலைக்கப்படலாம் என்றும் 'லங்கா தீப' மேலும் தெரிவித்தது. ம-இ

## ஜனாதிபதி தேர்தலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர், இதுகுறித்துமேலும் கூறுகையில், இந்தியப் படை முன்பு இங்கு வருவதற்கு சில விசேட காரணங்கள் இருந்தன. தமிழ் தீவிரவாதிகளிடம் ஆயுதங்களை களையவே அவர்கள் இங்கு வந்தார்கள். அது நிறைவேறாமல் போகவே யுத்தம் நடைபெற்றது.

எனது கணவர் காமினியின் கொலை முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவின் கொலையைப் போன்றேஉள்ளது. எனினும் எதுவித ஆதாரமுமின்றி விடுதலைப் புலிகள்தான் எனது கணவரை கொன்றார்கள் எனக் கூறமுடியாது. இதுபற்றி தற்போது எதுவும் கூற நான் விரும்பவில்லை. திரு. ரணில் விக்கிரமசிங்க ஐ. தே. க.வின் பிரதித்தலைவராக இருப்பதால் இக்கொலை பற்றி மேலதிக விபரங்களை அவரிடம் கேளுங்கள் விசாரணைகள் முடிவுபெறும் வரை நாங்கள் காத்திருப்போம். அதில் எல்லாம் தெரிய வரும்.

## நியமனக் கடிதம்

யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி லிகிதர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட 18 பேரும் தங்கள் நியமன கடிதத்தை பெற்றுக்கொள்வதற்காக நாளை புதன்கிழமை காலை 8-30 மணிக்கு கன்னாதிட்டியிலுள்ள பிரதேச தலைமைக் காரியாலயத்திற்கு சமூகமளிக்குமாறு மக்கள் வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று மாலை மூன்று மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சந்திரிகா வென்றதுமே

[1ம் பக்கத் தொடர்ச்சி[

இருப்பதால், புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் மிக விரைவிலேயே ஆரம்பமாகும் எனப் பெயர் குறிப்பிட விரும்பாத அந்தப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். (இ)

வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பற்றறிகளையும் வேறு பொருட்களையும் பிரதமர் சந்திரிகா அனுப்பியது பிழை எனவும் கூறினர். [சி-இ]

## காமினி கொலையின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தில், புலன் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த உளவுச் சேவை நிறுவனதுடன் காமினி திசாநாயக்கா மிக நெருக்கமாக இருந்தார் என்றும்பின் அவரின் செயல்பாடு இந்த அமைப்புக்கு இடையூறாக இருந்தபடியால் இவரைக் கொலை செய்யும் திட்டத்தில் அந்த அமைப்பு இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்தக்கொலையை விடுதலைப் புலிகள் செய்ததாக அவர்கள் மேல் பழியை சுமத்துவதற்கு கொலையுண்ட இடத்தில் சயனைட் போடப்பட்டு இருந்திருக்கலாம், என்று விசாரணை அதிகாரி நம்புவதாக 'ஹிரு' மேலும் தெரிவித்தது. ம இ

## நாளை நடைபெறவுள்ள

[1ம் பக்கத் தொடர்ச்சி[

நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கையின் மூன்றாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நாளை நடைபெறுகிறது.

பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பில் பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவும், ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் திருமதி ஸ்ரீமா திஸாநாயக்காவும் போட்டியிடுகின்றனர். இவர்கள் இருவருமே விதவைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுடன் வேறு மூவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

சுயேட்சை வேட்பாளர்களாக ஏ. ஜே. ரணசிங்கவும், ஹட்சன் சமரசிங்கவும், சிங்களே பூமி புத்ரகட்சியின் சார்பில் டாக்டர் ஹரிச்சந்திர விஜேதுங்கவும் போட்டியிடுகின்றனர். திரு. நிஹால் கலப்பத்தி என்ற மற்றொரு வேட்பாளர் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றது தெரிந்ததே.

நாளைய தேர்தலில் ஒரு கோடியே 95 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

காலை 7-00 மணி முதல் மாலை 4-00 மணிவரை 9580 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப்பதிவு நடைபெறும். (க - இ)

## ஸ்ரீமாவின் வீட்டை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சோதனை செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

அரசு இதனை வேண்டுமென்றே செய்துள்ளதாக ஸ்ரீமா திஸாநாயக்காவின் தேர்தல் ஆலோசகர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரகசியப் பொலிசார் தமது வீட்டைச் சோதனை செய்தது குறித்து, திருமதி திசநாயக்காவும் அரசுக்கு எதிராகத் தமது கடும் ஆட்சேபணையைத் தெரிவித்துள்ளார்.

இரகசியப் பொலிஸார் அவரது வீட்டை சோதனையிட்டபோது திருமதி திஸாநாயக்கா வீட்டிலிருக்கவில்லை. காலியில் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொள்ள அவர் சென்றிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## சந்திரிகாவுக்கே

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய முன்னணி 38,67,675 வாக்குகள் பெற்றது. முஸ்லீம் காங்கிரஸ் 1,43 307வாக்குகள் பெற்றது. முஸ்லீம் காங்கிரஸ் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தெரிவிக்கின்றபடியால், பொதுசன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியை விட 5,32760 வாக்குகள் கூடுதலாகப் பெறும் என்றும் 'ராவய' மேலும் தெரிவித்தது. ம-இ

இதேவேளையில் இரகசியப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரிலேயே திருமதி திஸாநாயக்காவின் வீடு சோதனையிடப்பட்டதாக தகவல்துறை விமானப் போக்கு வரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

ஆனால் திருமதி திஸாநாயக்காவின் வீட்டிலிருந்து பிரதமருக்கு எதிரான எந்தவொரு பிரசுரங்களும் இரகசியப் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. ]இ]

## மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் தியாகலிங்கம்**

(சொக்கநாதர் ஓவசியர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகலிங்கம் ஓவசியர் காலமானார். இவர் செல்லம்மாவின் அன்பு மகனும் க. செல்லம்மாவின் அன்பு மருமகனும், தவமணி தேவியின் அன்புக் கணவரும் கௌரி, கலா, ஜெயா, ஸ்ரீ, நந்தன் ஆகியோரின்அன்புத்தந்தையும், ராஜனின் [London] அன்பு மாமனாரும், தியாகராஜா, பரமநாதன், ஏகாம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயலட்சுமி சண்முகசுந்தரம், இந்திராணி, கமலா, சோதிமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சு. தியாகராஜா
(அண்ணன்)

29/3, பிறவுண் ரோட்,
2ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[எ-4488]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 08-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber ;B/16336/B;